Q.C. 136

**DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)**

| **Name of the Test:** | The Jail Test Part - I (c) Laws, Rules, Regulations and Orders relating to Jail Management (Without Books) | 131 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. What does meant for "adult prisoners" according to Tamil Nadu Prisoners Manual Volume – II
தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி 2 க்கிணங்க 'வயது சிறைவாசி' என்பதற்கான பொருள் என்ன?

(A) Prisoners who is more than 18 years of age
18 வயத்திற்கு மேற்பட்ட சிறைவாசி

(B) Prisoners who is more than 20 years of age
20 வயத்திற்கு மேற்பட்ட சிறைவாசி

(C) Prisoners who is more than 22 years of age
22 வயத்திற்கு மேற்பட்ட சிறைவாசி

(D) Prisoners who is more than 21 years of age
21 வயத்திற்கு மேற்பட்ட சிறைவாசி

2. The responsibility of preparation of quality food rests with
சிறைவாசிக்கு வழங்க தரமான உணவினை தயாரிக்கும் பொறுப்பு அலுவலர் பொருள் என்ன?

(A) Jailor
சிறை அலுவலர்

(B) Deputy Jailor
துணை சிறை அலுவலர்

(C) Assistant Jailor
உதவி சிறை அலுவலர்

(D) Chief head warder (Tower)
முதல் தலைமைக்காவலர் (கோபுரம்)

3. If a Prisoner escapes from a prison immediately
சிறையில் சிறைவாசிகள் தப்பித்தால் உடனடியாக

(A) The doors should be locked
கதவுகளை பூட்டலாம்

(B) To make siren
இடர் ஒலி எழுப்பலாம்

(C) Open the doors
கதவுகளை திறந்துவிடலாம்

(D) All the above may be done
மேற்கண்ட அனைத்தும் செய்யலாம்

4. The incoming letters for prisoners should be
சிறைவாசிக்கு வரும் கடிதங்கள்

(A) Censored
தணிக்கை செய்யப்படும்

(B) Not Censored
தணிக்கை செய்யப்படாது

(C) Censor not necessary
தணிக்கை தேவையில்லை

(D) Censoring is important
தணிக்கை அவசியம்

5. Who will make the entries regarding the escape and recapture of Prisoners in History Ticket?
சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் மீள பிடிக்கப்படுதல் தொடர்பான பதிவுகளை வரலாற்று அட்டையில் யார் மேற்கொள்வார்?

(A) Remission Clerk
தண்டனை குறைப்பு பிரிவு எழுத்தர்

(B) Jailor
சிறை அலுவலர்

(C) Additional Superintendent
கூடுதல் கண்காணிப்பாளர்

(D) Assistant Jailor
உதவி சிறை அலுவலர்

6. Maximum age of Prisoner employed in Prison shall be
சிறையில் வேலையில் அமர்த்தப்படும் சிறைவாசியின் அதிகபட்ச வயது?

(A) 60 Years
60 வயது

(B) 58 Years
58 வயது

(C) 55 Years
55 வயது

(D) 54 Years
54 வயது

7. Who should call for reports in respect of Advisory board cases?
அறிவுரை கழக நேர்வுகளுக்கான அறிக்கைகளை யார் கோர வேண்டும்?

(A) Range Deputy Inspector General of Prisons
சரக சிறைத்துறை துணைத்தலைவர்

(B) Chief Remission Clerk
தலைமை தண்டனை குறைப்பு பிரிவு எழுத்தர்

(C) Administrative Officer
நிர்வாக அலுவலர்

(D) Jailor
சிறை அலுவலர்

8. Normally the total period of remission for a prisoner should not exceed
சாதாரணமாக ஒரு சிறைவாசிக்கு வழங்கப்படும் தண்டனை குறைப்பு மொத்த தண்டனையில்

(A) 1/4 of conviction
1/4 பங்கு இருக்கலாம்

(B) 1/2 of conviction
1/2 பங்கு இருக்கலாம்

(C) 3/4 of conviction
3/4 பங்கு இருக்கலாம்

(D) 1 time of conviction
1 பங்கு இருக்கலாம்

9. Who is responsible of the economical working of prison?
சிறையை சிக்கனமாக செயல்படுத்துவதற்கு யார் பொறுப்பு?

(A) Administrative officer
நிர்வாக அலுவலர்

(B) Office Superintendent (Accounts)
அலுவலக கண்காணிப்பாளர் (கணக்குகள்)

(C) Superintendent of Prisons
சிறைக் கண்காணிப்பாளர்

(D) Jailor
சிறை அலுவலர்

10. The number of ball ammunition in the pouch of the Guard sentry shall be
சிறையில் பாதுகாப்பு காவலரிடம் இருக்க வேண்டிய குண்டுகள் அளவு?

(A) 20 Nos
20 எண்கள்

(B) 15 Nos
15 எண்கள்

(C) 10 Nos
10 எண்கள்

(D) 5 Nos
5 எண்கள்

11. In the prison LPG gas allowed for the preparation food for 1 prisoner is
சிறையில் உணவு தயாரிக்க 1 சிறைவாசிக்கு அனுமதிக்கப்படும் எரிவாயுவின் அளவு?

(A) 106 gms
106 கிராம்

(B) 104 gms
104 கிராம்

(C) 108 gms
108 கிராம்

(D) 110 gms
110 கிராம்

12. The age of rice used in prison for the preparation of food should be
சிறைவாசிக்கு உணவு தயாரிக்க பயன்படும் அரிசி

(A) age of rice before 6 months
6 மாதத்திற்கு முன் தயாரித்தாக வேண்டும்

(B) age of rice before 12 months
12 மாதத்திற்கு முன் தயாரித்தாக வேண்டும்

(C) age of rice before 1 year
1 வருடத்திற்கு முன் தயாரித்தாக வேண்டும்

(D) New one
புதியதாக இருக்க வேண்டும்

13. Who is responsible for execution of all sentences for prisoners?
சிறைவாசிகளின் அனைத்து தண்டனை நிறைவேற்றுவதற்கு யார் பொறுப்பு?

(A) Remission clerk
தண்டனை குறைப்பு பிரிவு எழுத்தர்

(B) Jailor
சிறை அலுவலர்

(C) Additional Superintendent
கூடுதல் கண்காணிப்பாளர்

(D) Superintendent of Prisons
சிறை கண்காணிப்பாளர்

14. When a prisoner is sent to see relative prisoner in a hospital outside the prison in serious condition. he shall be sent
உடல்நிலை கவலைக்கிடமான நிலையில் சிறைக்கு வெளியே உள்ள மருத்துவமையில் இருக்கும் உறவினர் சிறைவாசியை பார்க்க அனுப்பப்படும் சிறைவாசியை ________ அனுப்பப்பட வேண்டும்?

(A) Without escort
வழிக்காவல் இன்றி

(B) Under Police escort
காவல்துறை வழிக்காவலுடன்

(C) Under Warder escort
சிறைக்காவலர் வழிக்காவலுடன்

(D) Under Military escort
இராணுவ வழிக்காவலுடன்

15. Who has to prepare the appeal petitions of newly admitted prisoners?
புதியதாக அனுமதிக்கப்படும் சிறைவாசிகளின் மேல்முறையீட்டு மனுக்களை யார் தயார் செய்ய வேண்டும்?

(A) Welfare Officer
நல அலுவலர்

(B) Deputy Jailor
துணை சிறை அலுவலர்

(C) Social case work expert
சமூகவியல் வல்லுநர்

(D) Jailor
சிறை அலுவலர்

16. Unauthorized property seized from a prisoner at time of search
சிறைவாசியை பரிசோதனை செய்து எடுக்கு சொத்துகளை

(A) To be returned
சிறைவாசியிடம் திருப்பி கொடுக்க வேண்டும்

(B) May be taken by searching warder
சோதனை காவலர் எடுத்துக் கொள்ளலாம்

(C) Remitted to Government account
அரசு கணக்கில் சேர்க்கலாம்

(D) May be given to another prisoner
வேறு சிறைவாசிக்கு கொடுக்கலாம்

17. Causal prisoners means
சாதாரண சிறைவாசி என்றால்

(A) Simple Imprisonment prisoners
மெய்காவல் சிறைவாசி

(B) Remand prisoners
விசாரணை சிறைவாசிகள்

(C) Convicted habitual prisoners
தண்டனை பெற்று வழக்கமாக சிறைக்கு வரும் சிறைவாசிகள்

(D) Other than convicted habitual prisoners
தண்டனை பெற்று வழக்கமான சிறைவாசிகள் தவிர அனைவரும்

18. Up to how many month conviction can be retained in the District jail?
மாவட்ட சிறையில் எத்தனை மாதங்கள் வரை தண்டனை பெற்ற கைதிகள் தங்கவைத்து கொள்ளலாம்?

(A) 1 month
1 மாதம்

(B) 2 months
2 மாதங்கள்

(C) 3 months
3 மாதங்கள்

(D) 6 months
6 மாதங்கள்

19. At the time of lockup the prisoners should undergo
சிறைவாசியை மாலை அடைப்பு செய்யும் முன்பு அவசியம்

(A) Removal of Dress
ஆடைகளை களைய வேண்டும்

(B) Searching
சோதனை செய்ய வேண்டும்

(C) Naked
நிர்வாணப்படுத்த வேண்டும்

(D) Beat and locked
அடித்து பூட்ட வேண்டும்

20. On day time the keys of all Block should be kept at
பகல் நேரத்தில் சிறையின் அனைத்து சாவிகளையும் வைக்கும் இடம்

(A) Tower
கோபுரம்

(B) Watch Tower
கண்காணிப்பு கோபுரம்

(C) Gate
பிரதான வாயில்

(D) Office
அலுவலகம்

21. How many rules are prevails in Tamil Nadu (Part-II) prison manual 1983?
தமிழ்நாடு சிறை விதிகள் (பாகம்-II) 1983 இல் மொத்தம் எத்தனை விதிகள் உள்ளன?

(A) 1136
(B) 1130
(C) 1115
(D) 1120

22. Local purchase of medicine for the use of prison hospital medicine emergencies
சிறை மருத்துவமனையில் மருந்துகள் அவசரநிலையில் பயன்பாட்டிற்காக உள்ளூர் கொள்முதல் செய்திட நிதி அங்கீகாரம் எவ்வளவு?

(A) 5000 per month
மாதத்திற்கு 5000
(B) 2000 per month
மாதத்திற்கு 2000
(C) 3000 per month
மாதத்திற்கு 3000
(D) 10000 per month
மாதத்திற்கு 10000

23. Who is full incharge of the remission?
தண்டனை குறைப்பு பிரிவு முழு பொறுப்பு அலுவலர் யார்?

(A) Jailor
சிறை அலுவலர்
(B) Additional Superintendent of Prisons
கூடுதல் சிறை கண்காணிப்பாளர்
(C) Deputy Jailor
துணை சிறை அலுவலர்
(D) Superintendent of Prisons
சிறைக் கண்காணிப்பாளர்

24. During emergency in night hours to take keys box
இரவில் அவசர நேர்வுகளில் சாவிப்பெட்டியில் உள்ள சாவியை எடுக்க

(A) Not necessary
சாவியை எடுக்க வேண்டிய அவசியமில்லை
(B) Key must be taken
சாவியை எடுப்பது அவசியம்
(C) The glass may be broken and the key will be taken
கண்ணாடியை உடைத்து சாவியை எடுக்கலாம்
(D) Key may be used to open the box
சாவி கொண்டு திறக்கலாம்

25. In the Prison a Hindu prisoner may be allowed to have
சிறையில் உள்ள இந்து சிறைவாசி விரும்பினால்

(A) Sacred thread
பூனூல் அணியலாம்
(B) Hair growth
தலைமுடி வளர்க்கலாம்
(C) Kudumi
குடுமி வளர்க்கலாம்
(D) Bread
தாடி வளர்க்கலாம்

26. Which are the Central Prison functioning under Trichy range of Deputy Inspector General of Prisons
திருச்சி சரக சிறைத்துறை துணைத்தலைவரின் கீழ் செயல்படும் மத்திய சிறைகள் யாவை?

(A) Central Prison, Coimbatore and Salem
மத்தியசிறை, கோவை மற்றும் சேலம்

(B) Central Prison, Trichy and Borstal School Pudukkotai
மத்தியசிறை, திருச்சி மற்றும் பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை

(C) Central Prison, Vellore and Cuddalore
மத்தியசிறை, வேலூர் மற்றும் கடலூர்

(D) Central Prison, Madurai and Palayamkottai
மத்தியசிறை, மதுரை மற்றும் பாளையங்கோட்டை

27. During their religious festivals the prisoners may take
சிறைவாசி தனது பண்டிகை காலங்களில்

(A) Sweet meals and fruits
இனிப்பு மற்றும் பழங்கள் சாப்பிடலாம்

(B) Biriyani
பிரியாணி சாப்பிடலாம்

(C) Undergo religious fasting
உண்ணா நோன்பு இருக்கலாம்

(D) Take only Water
தண்ணீர் மட்டும் அருந்தலாம்

28. Who is responsible of the cleanliness of the Warders quarters?
சிறை காவலர் குடியிருப்புகளை சுத்தமாக வைத்திருப்பதற்கு யார் பொறுப்பு?

(A) Jailor
சிறை அலுவலர்

(B) Assistant Jailor
உதவி சிறை அலுவலர்

(C) Grade I Warder
முதல் நிலைக் காவலர்

(D) Chief Head Warder
முதல் தலைமைக் காவலர்

29. In correctional wing, who shall maintain the stamp account?
சீர்திருத்தம் பிரிவில், அஞ்சல் தலைக் கணக்குகளை யார் பேணிட வேண்டும்?

(A) Social case work expert
சமூகவியல் வல்லுநர்

(B) Psychologist
உளவியல் நிபுணர்

(C) Welfare Officer
நல அலுவலர்

(D) Chief Head Warder
முதல் தலைமை காவலர்

30. In Prison the ratio between prisoners and teachers is?
சிறையில் சிறைவாசிகள் ஆசிரியர் விகிதம்?

(A) 100 : 1 (B) 200 : 1

(C) 300 : 1 (D) 400 : 1

31. The officer who permit the prisoners to write examination
சிறைவாசிகள் தேர்வுகள் எழுத அனுமதி அளிப்பவர்

(A) Jailor
சிறை அலுவலர்

(B) Jail Superintendent
சிறைக் கண்காணிப்பாளர்

(C) Deputy Inspector General of prisons
சிறைத்துறை துணை தலைவர்

(D) Inspector General of prisons
சிறைத்துறை தலைவர்

32. Who is the custodian of remand warrants?
விசாரணை சான்றாணைகளின் காப்பாளர் யார்?

(A) Remission clerk
தண்டனை குறைப்பு பிரிவு எழுத்தர்

(B) History ticket warder
வரலாற்று அட்டை காவலர்

(C) Jailor
சிறை அலுவலர்

(D) Additional Superintendent
கூடுதல் கண்காணிப்பாளர்

33. Who is the chairman of the classification committee?
சிறைவாசிகளை வகைப்படுத்தும் குழுவின் தலைவர் யார்?

(A) Welfare officer
நல அலுவலர்

(B) Psychologist
மன இயல் நிபுணர்

(C) Superintendent of Prisons
சிறை கண்காணிப்பாளர்

(D) Medical officer
மருத்துவ அலுவலர்

34. In what interval the Superintendent of Prisons make surprise visit to the out gang?
என்ன கால இடைவெளியில் சிறைக் கண்காணிப்பாளர் வெளிக்குழுவிற்கு திடீர் விஜயம் மேற்கொள்ளவேண்டும்?

(A) Once a week
வாரம் ஒரு முறை

(B) Once a month
மாதம் ஒரு முறை

(C) Once in two weeks
இருவாரங்களுக்கு ஒரு முறை

(D) Once a quarter
காலாண்டிற்கு ஒரு முறை

35. During the examination the prisoner may wear
சிறைவாசிகள் தேர்வுகள் எழுதும் போது

(A) Own cloths
சொந்த துணிகளை அணியலாம்

(B) Prison Uniform
சிறை துணிகளை அணிய வேண்டும்

(C) Not necessary to wear dress
துணிகளை அணிய வேண்டியதில்லை

(D) None of the wear above
மேற்கூறிய ஏதுமில்லை

36. Prisoners examination fees should be remitted by?
சிறைவாசிகளின் தேர்வு கட்டணங்களை

(A) Prisoners
சிறைவாசி செலுத்த வேண்டும்

(B) The relatives of Prisoners
சிறைவாசியின் உறவினர் செலுத்த வேண்டும்

(C) Government
அரசே செலுத்தும்

(D) Government will not pay
அரசு செலுத்தாது

37. The Prison medical officer should weight the prisoners
சிறைவாசியின் எடை மருத்துவ அலுவலரால்

(A) Once in a month
மாதம் 1 முறை பதிவு செய்யப்படும்

(B) Once in 2 month
2 மாதத்திற்கு ஒரு முறை பதிவு செய்யப்படும்

(C) Once in 15 days
15 நாட்களுக்கு ஒரு முறை பதிவு செய்யப்படும்

(D) Once in 60 days
60 நாட்களுக்கு ஒரு முறை பதிவு செய்யப்படும்

38. How many times a prisoner can write one examination?
ஒரு தேர்வினை ஒரு சிறைவாசி எத்தனை முறை எழுத வேண்டும்?

(A) Not exceeding 2 times
2 முறை

(B) Not exceeding 1 time
ஒரு முறை

(C) Not exceeding 4 times
4 முறை

(D) Not exceeding 3 times
3 முறை

39. Which one of the following is not a prohibited article inside the Prison?
கீழ்காணும் எந்த ஒன்று சிறைக்குள் தடைசெய்யப்படாத பொருள் ஆகும்?

(A) Water
தண்ணீர்

(B) Money
பணம்

(C) Jewel
நகை

(D) Playing cards
விளையாடும் சீட்டுகள்

40. Who is the competent authority to grant ordinary leave?
சாதாரண விடுப்பு அங்கீகரிக்க தகுதி படைத்த அதிகாரி?

(A) Inspector General of Prisons
சிறைத்துறை தலைவர்

(B) Dy.Inspector General of Prisons (Range)
சரக சிறைத்துறை துணை தலைவர்

(C) Superintendent of Prisons
சிறை கண்காணிப்பாளர்

(D) District collector
மாவட்ட ஆட்சியர்

41. Prisoners quarreling is
ஒரு சிறைவாசி சக சிறைவாசியுடன் சண்டையிடுவது

(A) Permitted
அனுமதிக்கப்படும்

(B) Not Permitted
அனுமதிக்கப்படாது

(C) Treat as Prison offence
சிறைக்குற்றமாக கருதப்படும்

(D) None of the above
மேற்கூறிய ஏதுமில்லை

42. Hunger strike in Prison is
சிறையில் உண்ணாவிரதம் இருப்பது?

(A) Permitted
அனுமதிக்கப்படும்

(B) Not Permitted
அனுமதிக்கப்படாது

(C) Treat as Prison offence
சிறைக்குற்றமாக கருதப்படும்

(D) Not a Prison offence
சிறைக்குற்றமாக கருதப்படாது

43. Who is eligible to come under remission system?
தண்டனை குறைப்பு முறையின் கீழ் வர தகுதியுடையவர்கள் யாவர்?

(A) Prisoners sentenced to R.I in 2 weeks
2 வார காலம் கடுங்காவல் பெற்ற சிறைவாசி

(B) Prisoners sentenced to R.I in 2 months
2 மாதம் கடுங்காவல் பெற்ற சிறைவாசி

(C) Prisoners sentenced to R.I in 4 weeks
4 வார காலம் கடுங்காவல் பெற்ற சிறைவாசி

(D) Prisoners sentenced to R.I in 3 months
3 மாத காலம் கடுங்காவல் பெற்ற சிறைவாசி

44. Who is the chairman of Advisory board in central prisons?
மத்திய சிறைகளில் அறிவுரை கழகத்தின் தலைவர் யார்?

(A) District Judge
மாவட்ட நீதிபதி

(B) Chief Judicial Magistrate
தலைமை நீதித்துறை நடுவர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Deputy Inspector General of Prisons
சிறைத்துறை துணைத்தலைவர்

45. Who will fix the number of convict warder?
குற்ற காவலர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பது யார்?

(A) Superintendent of Prisons
சிறை கண்காணிப்பாளர்

(B) Deputy Inspector General of Prisons
சிறைத்துறை துணைத் தலைவர்

(C) Inspector General of Prisons
சிறைத்துறை தலைவர்

(D) Government
அரசு

46. The prohibited articles in prison are?
கீழ்கண்ட பொருட்கள் சிறையில் தடை செய்யப்பட்ட பொருட்கள் ஆகும்.

(A) Poison, Alcohol, Ganja
விஷம், சாராயம், கஞ்சா

(B) Poison, Alcohol, Pen
விஷம், சாராயம், பேனா

(C) Poison, Ganja, Apple
விஷம், கஞ்சா, ஆப்பிள்

(D) Banana, Alcohol, Ganja
வாழைப்பழம், சாராயம், கஞ்சா

47. If a Prisoner committed a prison offence
சிறைவாசிகள் சிறைகுற்றங்கள் செய்தால்

(A) Punishment will be awarded
தண்டனை வழங்கப்படும்

(B) No Punishment
தண்டனை வழங்கப்படாது

(C) Will be pardoned
மன்னித்து விடப்படும்

(D) No Pardon
மன்னித்து விடப்படாது

48. Say which is correct
எது சரியானது எனக் கூறுக

(A) No Prisoners Shall be Permitted to transfer his earning to another
ஒரு சிறைவாசி தனது கணக்கிலுள்ள ஊதியத்தை வேறொரு சிறைவாசிக்கு மாற்ற அனுமதிக்கக்கூடாது

(B) The Additional Superintendent is the chief executive officer of the prison
கூடுதல் கண்காணிப்பாளர் சிறையின் செயல் அலுவலர் ஆவார்

(C) 20 days emergency leave is granted to convicts is a year
ஒரு வருடத்திற்கு 20 நாட்கள் அவசர கால விடுப்பு தண்டனை சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது

(D) Sunday is not a prison holiday
ஞாயிறு சிறை விடுமுறை தினம் அல்ல

49. What is the amount allowed for issue of Special diet to each prisoner for Pongal Independence day etc?
பொங்கல், சுதந்திர தினம் போன்ற தினங்களில் ஒவ்வொரு சிறைவாசிக்கும் சிறப்பு உணவு வழங்கிட அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(A) Rs. 2
ரூபாய். 2

(B) Rs. 5
ரூபாய். 5

(C) Rs. 100
ரூபாய். 100

(D) Rs. 75
ரூபாய். 75

50. For prison offence, the prison privilege will be cut for
சிறைக்குற்றம் செய்யும் சிறைவாசிக்கு சிறை சலுகை ரத்து செய்யும் காலம்

(A) Not exceeding 6 months
6 மாதம் மிகாமல்

(B) Not exceeding 12 months
12 மாதம் மிகாமல்

(C) Not exceeding 3 months
3 மாதம் மிகாமல்

(D) Not exceeding 1 year
1 வருடம் மிகாமல்

51. For Prison offence a prisoner may be kept under
சிறைக்குற்றம் புரியும் சிறைவாசியை

(A) Cellular confinement for 1 month
1 மாதம் தனி அறையில் வைக்கலாம்

(B) Cellular confinement for 15 days
15 நாட்கள் தனி அறையில் வைக்கலாம்

(C) Cellular confinement not more than 7 days
7 நாட்கள் மிகாமல் தனி அறையில் வைக்கலாம்

(D) Cellular confinement for 10 days
10 நாட்கள் தனி அறையில் வைக்கலாம்

52. The Good conduct remission will be awarded at the rate of
நல்ல நடத்தை உடைய சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் தண்டனை குறைப்பு

(A) 6 days for 1 month
1 மாதத்திற்கு 6 நாட்கள்

(B) 12 days for 2 months
2 மாதத்திற்கு 12 நாட்கள்

(C) 2 days for 1 months
1 மாதத்திற்கு 2 நாட்கள்

(D) 4 days for 1 month
1 மாதத்திற்கு 4 நாட்கள்

53. Once how many years shoes are issued to eligible prison personnel
தகுதிவாய்ந்த களப்பணியாளருக்கு எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை காலணிகள் வழங்கப்படுகின்றன

(A) One year
ஒரு வருடம்

(B) Two year
இரண்டு வருடம்

(C) Three year
மூன்று வருடம்

(D) Five year
ஐந்து வருடம்

54. In which year the Prisons Act was enacted?
எந்த ஆண்டு சிறைச்சாலை சட்டம் இயற்றப்பட்டது?

(A) 1895
(B) 1984
(C) 1973
(D) 1894

55. In how many spells the 15 days of emergency leave granted in a year?
ஒரு வருடத்தில் 15 நாட்கள் அவசர கால விடுப்பு எத்தனை பகுதிகளாக அங்கீகரிக்கப்படுகிறது?

(A) 2
(B) 5
(C) 4
(D) 3

56. What is the weight of baton supplied to warders?
காவலர்களுக்கு வழங்கப்படும் லத்தியின் எடை என்ன?

(A) Not more than 624 gms
624 கிராமுக்கு மிகாமல்
(B) Not more than 700 gms
700 கிராமுக்கு மிகாமல்
(C) Not more than 500 gms
500 கிராமுக்கு மிகாமல்
(D) Not more than 650 gms
650 கிராமுக்கு மிகாமல்

57. Who is in-charge of ration store?
உணவு கிடங்கின் முழு பொறுப்பு அலுவலர் யார்?

(A) Assistant jailor
உதவி சிறை அலுவலர்
(B) Deputy jailor
துணை சிறை அலுவலர்
(C) Jailor
சிறை அலுவலர்
(D) Office Superintendent
அலுவலக கண்காணிப்பாளர்

58. Custody of prisoner's property (expect money) entrusted to
சிறைவாசிகளின் விலை மதிப்புள்ள பொருட்கள் (பணம் தவிர) இதர பொருட்கள் யார் பொறுப்பில் இருக்க வேண்டும்.

(A) Assistant jailor
உதவி சிறை அலுவலர்
(B) Deputy jailor
துணை சிறை அலுவலர்
(C) Jailor
சிறை அலுவலர்
(D) Office Superintendent
அலுவலக கண்காணிப்பாளர்

59. Other than Chennai civil prisoners shall be committed to
சென்னை தவிர சிவில் சிறைவாசிகள் எந்த மத்திய சிறையில் அனுமதிக்கப்படுவர்

(A) Madurai, Central Prison
மதுரை மத்தியசிறை

(B) Palayamkottai, Central Prison
பாளையங்கோட்டை மத்தியசிறை

(C) Trichy Central Prison
திருச்சி மத்தியசிறை

(D) Cuddalore Central Prison
கடலூர் மத்தியசிறை

60. Habitual prisoners may be
வழக்கமாக சிறைபடும் சிறைவாசிகளை

(A) Appointed as convict warder
குற்றக்காவலர்களாக நியமிக்கலாம்

(B) Not be appointed as convict warder
குற்றக்காவலர்களாக நியமிக்க கூடாது

(C) Appointed for 1 year only
1 வருடம் நியமிக்கலாம்

(D) Appointed for 10 years
10 வருடம் நியமிக்கலாம்

61. How many ranges are prevailed in Tamil Nadu Prisons Department?
தமிழ்நாட்டில் சிறைத்துறையில் எத்தனை சரகங்கள் உள்ளன?

(A) 4

(B) 5

(C) 6

(D) 3

62. At least how many times superintendent shall visit prison at night?
குறைந்தபட்சம் எத்தனை முறை சிறைக்கண்காணிப்பாளர் இரவு சுற்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) Twice a month
மாதத்திற்கு இரண்டு முறை

(B) Once a week
வாரத்திற்கு ஒரு முறை

(C) Twice a week
வாரத்திற்கு இரண்டு முறை

(D) Once a month
மாதத்திற்கு ஒரு முறை

63. How many individual counseling should given by psychologist to prisoners?
சிறைவாசிகளுக்கு மன இயல் நிபுணரால் எத்தனை தனிப்பட்ட சிறைவாசிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் வழங்க வேண்டும்

(A) Not less than two prisoners per day
ஒரு நாளைக்கு இரண்டு சிறைவாசிகளுக்கு குறையாது

(B) Not less than two prisoners per week
வாரத்திற்கு இரண்டு சிறைவாசிகளுக்கு குறையாது

(C) Not less than two prisoners per month
மாதத்திற்கு இரண்டு சிறைவாசிகளுக்கு குறையாது

(D) Not less than two prisoners per year
வருடத்திற்கு இரண்டு சிறைவாசிகளுக்கு குறையாது

64. The weight of cooked rice with porridge water?
சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவின் எடை (கஞ்சியுடன்)

(A) 4 times the weight of raw rice
அரிசியின் எடையைவிட 4 மடங்கு இருக்க வேண்டும்

(B) 6 times the weight of raw rice
அரிசியின் எடையைவிட 6 மடங்கு இருக்க வேண்டும்

(C) 3/4 times the weight of raw rice
அரிசியின் எடையைவிட 3/4 மடங்கு இருக்க வேண்டும்

(D) 1 time the weight of raw rice
அரிசியின் எடையைவிட 1 மடங்கு இருக்க வேண்டும்

65. Which one of the following shall not be handled as emergency?
கீழ்கண்டவற்றுள் எதனை அவசர நிலையாக கருத கூடாது?

(A) Mass release
அதிக எண்ணிக்கையிலான விடுதலை

(B) Escape
தப்பித்தல்

(C) Riot
கலகம்

(D) Strike
போராட்டம்

66. Who is the custodian of History Tickets?
வரலாற்று அட்டையின் பாதுகாப்பாளர் யார்?

(A) Jailor
சிறை அலுவலர்

(B) Remission Clerk
தண்டனை குறைப்பு பிரிவு எழுத்தர்

(C) Additional Superintendent
கூடுதல் கண்காணிப்பாளர்

(D) Welfare Officer
நல அலுவலர்

67. Who may recommend for classification in "A" Class?
"A" வகுப்பு வகைப்பாட்டிற்கு யார் பரிந்துரைக்கலாம்?

(A) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

(B) Court
நீதிமன்றம்

(C) Regional Probation Officer
மண்டல நன்னடத்தை அலுவலர்

(D) Welfare Officer
நல அலுவலர்

68. A Prisoner who was sentenced on 21.11.17 to two substantive terms of imprisonment of one year each shall be released on which date?
21.11.17 அன்று இரண்டு தனித்தனியாக ஒரு வருட தண்டனைகள் பெற்ற ஒரு சிறைவாசி எந்த தேதியில் விடுதலை செய்யப்பட வேண்டும்?

(A) 19.11.19

(B) 20.11.19

(C) 21.11.19

(D) 22.11.19

69. Special Remission for the prisoners given by the superintendent is
கண்காணிப்பாளரால் சிறைவாசிகளுக்கு சிறப்பு தண்டனை குறைப்பு எத்தனை நாட்கள் வழங்கப்படும்.

(A) 15 days per year
வருடத்திற்கு 15 நாட்கள்

(B) 60 days per year
வருடத்திற்கு 60 நாட்கள்

(C) 30 days per year
வருடத்திற்கு 30 நாட்கள்

(D) 45 days per year
வருடத்திற்கு 45 நாட்கள்

70. Who is not a correctional officer?
யார் ஒரு சீர்திருத்த அதிகாரி அல்ல?

(A) Psychologist
மனஇயல் நிபுணர்

(B) Social case work expert
சமூக நல வல்லுநர்

(C) Welfare officer
நல அலுவலர்

(D) Office manager
அலுவலக மேலாளர்

71. After how many days absence without leave considered as offence of desertion?
விடுப்பு இல்லாமல் எத்தனை நாட்கள் கடமைக்கு வராமல் இருப்பது குற்றமாக கருதப்படுகிறது?

(A) 18 days
18 நாட்கள்

(B) 14 days
14 நாட்கள்

(C) 21 days
21 நாட்கள்

(D) 29 days
29 நாட்கள்

72. For the purpose of calculation of normal date of release of a life convict, how many years to be taken into account?
ஓர் ஆயுள் தண்டனை சிறைவாசியின் சாதாரண விடுதலை தேதியினை கணக்கிடும் நோக்கத்திற்கு எத்தனை வருடங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்?

(A) 21 Years
21 வருடங்கள்

(B) 40 Years
40 வருடங்கள்

(C) 20 Years
20 வருடங்கள்

(D) 15 Years
15 வருடங்கள்

73. A Prisoner sentenced to S.I for one month on 1.1.17 escaped on 15.1.17 and recaptured on 16.1.17 Find out his date of release?
1.1.17 அன்று ஒரு மாத மெய்க்காவல் தண்டனை பெற்ற ஒரு சிறைவாசி 15.1.17 அன்று தப்பியோடி 16.1.17 அன்று மீள கைது செய்யப்படுகிறார், அவரது விடுதலை தேதியை கண்டுபிடிக்கவும்?

(A) 1.2.17

(B) 31.1.17

(C) 30.1.17

(D) 2.2.17

74. According to section 29 of prisoners Act 1900 who has the power of transferring a prisoner from one prison to another prison within the state?
சிறைப்பட்டவர் சட்டம் 1900 பிரிவு 29 க்கிணங்க ஒரு சிறைவாசியை மாநிலத்திற்குள் ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு மாற்றிட அதிகாரம் கொண்டவர் யார்?

(A) Range Deputy inspector General of Prisons
சரக சிறைத்துறை துணைத்தலைவர்

(B) Superintendent of Prisons
சிறை கண்காணிப்பாளர்

(C) Inspector General of Prisons
சிறைத்துறை தலைவர்

(D) Sessions Judge
அமர்வு நீதிபதி

75. In Prison the cooked food should be examined daily by
சிறைவாசிக்கு சமைக்கப்பட்ட உணவை தினந்தோறும் பரிசோதிக்கும் அலுவலர்

(A) Prison Doctor
சிறை மருத்துவ அலுவலர்

(B) District Medical Officer
மாவட்ட மருத்துவ அலுவலர்

(C) Welfare Officer
நல அலுவலர்

(D) Psychologist
மனநல மருத்துவர்

76. Officer not to smoke or drink while on duty mentioned in rule
கடமையில் இருக்கும் போது புகைப்பிடிக்கவோ, குடிக்கவோ கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள விதி

(A) Rule No 415 of Tamil Nadu Prison rules, 1983
விதி எண் 415 தமிழ்நாடு சிறைவிதிகள் 1983

(B) Rule No 420 of Tamil Nadu Prison rules, 1983
விதி எண் 420 தமிழ்நாடு சிறைவிதிகள் 1983

(C) Rule No 130 of Tamil Nadu Prison rules, 1983
விதி எண் 130 தமிழ்நாடு சிறைவிதிகள் 1983

(D) Rule No 135 of Tamil Nadu Prison rules, 1983
விதி எண் 135 தமிழ்நாடு சிறைவிதிகள் 1983

77. Who is officer in-charge for the manufacturing factory stores?
உற்பத்தி பிரிவுகளுக்கு பொறுப்பான அலுவலர் யார்?

(A) Stewed Assistant
ஸ்டீவட் உதவியாளர்

(B) Store Keeper
பண்டக காப்பாளர்

(C) Deputy Jailor
துணை சிறை அலுவலர்

(D) Assistant Jailor
உதவி சிறை அலுவலர்

78. Under sec.54 of the prison act, 1894 offence by prison-subordinate can be liable to
சிறை சட்டம், 1894 பிரிவு 54-இன் கீழ், குற்றம் செய்யும் சிறை-சார் அலுவலர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்.

(A) Fine not exceeding two hundred only
இருநூறு ரூபாய் மிகாமல் அபராதம்

(B) Imprisonment for the period not exceeding 3 months
3 மாதங்களுக்கு மிகாமல் சிறைவாசம்

(C) Both
இரண்டும்

(D) None of the above
மேற்கூறியவை ஏதுமில்லை

79. Monogram in Jailor's uniform
எது சிறை அலுவலர் சீருடையில் பொறிக்கப்பட்ட மோனோகிராம்

(A) TNJ
டி.என்.ஜே

(B) TJS
டி.ஜே.எஸ்

(C) TPS
டி.பி.எஸ்

(D) TNP
டி.என்.பி

80. In Central Prison, report book is maintained by
மத்திய சிறையின் அறிக்கை புத்தகம் பேணும் அலுவலர்

(A) Grade II Warder
இரண்டாம் நிலைக்காவலர்

(B) Grade I Warder
முதல் நிலைக்காவலர்

(C) Chief Head Warder
முதல் தலைமைக்காவலர்

(D) Assistant Jailor
உதவி சிறை அலுவலர்

81. In Central Prison Assistant Jailor is placed in-charge of
மத்திய சிறையில் உதவி சிறை அலுவலர் கீழ்காணும் இடங்களில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

(A) Sub jail Superintendent
கிளைச்சிறை கண்காணிப்பாளர்

(B) Ration Store
உணவுக்கிடங்கு

(C) Clothing Store
ஆடைக்கிடங்கு

(D) Factory Superintendent
தொழிற்சாலை கண்காணிப்பாளர்

82. In Central Prison Prisoners Cash Property is maintained by
மத்திய சிறையில் சிறைவாசிகளின் பணம் பராமரிக்கும் அலுவலர்

(A) Accountant
கணக்காளர்

(B) Assistant Jailor
உதவி சிறை அலுவலர்

(C) Deputy Jailor
துணை சிறை அலுவலர்

(D) Welfare Officer
நல அலுவலர்

83. __________ inspection is conducted by the superintendent or prisons to hear the complaints or prisoners.
சிறைவாசிகளின் புகார்களை கேட்பதற்கு __________ ஆய்வு கண்காணிப்பாளரால் நடத்தப்படுகிறது.

(A) Daily
தினசரி

(B) Fortnightly
இருவாரத்திற்கு ஒருமுறை

(C) Weekly
வாராந்திர

(D) Monthly
மாதாந்திர

84. The male foreign convicted prisoner shall be confirmed at
அயல்நாட்டு ஆண் தண்டனை சிறைவாசிகள் __________ சிறையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

(A) Central Prison, Coimbatore
மத்தியசிறை, கோவை

(B) Central Prison, Vellore
மத்தியசிறை, வேலூர்

(C) Central Prison, I Puzhal
மத்தியசிறை எண். I புழல்

(D) Central Prison, Palayamkottai
மத்தியசிறை, பாளையங்கோட்டை

85. Who will conduct the interview of condemned prisoner?
மரண தண்டனை சிறைவாசிகளின் நேர்காணலை யார் நடத்துவார்?

(A) Assistant Jailor
உதவி சிறைஅலுவலர்

(B) Deputy Jailor
துணை சிறை அலுவலர்

(C) Grade I Warder
முதல் நிலைக்காவலர்

(D) Chief Head Warder
முதல் தலைமைக்காவலர்

86. In which month the Assistant Jailor, should verify the valuable properties of prisoners every year?
உதவி சிறை அலுவலர், சிறைவாசிகளின் விலையுயர்ந்த பொருட்களை ஒவ்வொரு வருடமும் எந்த மாதம் சரிபார்க்க வேண்டும்?

(A) April
ஏப்ரல்

(B) October
அக்டோபர்

(C) December
டிசம்பர்

(D) March
மார்ச்

87. Who is responsible to report about the defects in prison buildings to the Superintendent of Prisons?
சிறை கட்டிடங்களில் உள்ள குறைபாடுகள் குறித்து சிறைக் கண்காணிப்பாளருக்கு தெரிவிப்பதற்கு யார் பொறுப்பு?

(A) Jailor
சிறை அலுவலர்

(B) Additional Superintendent
கூடுதல் கண்காணிப்பாளர்

(C) Warder
காவலர்

(D) Chief Head Warder
முதல் தலைமைக் காவலர்

88. Extracting work from female prisoners during pre-natal and post-natal periods work shall be
பெண் சிறைவாசிகளின் பிரசவத்திற்கு முன்பும் பின்பும் வேலை செய்வதில் இருந்து

(A) Exempted
விலக்கு அளிக்கலாம்

(B) Exemption not necessary
விலக்கு தேவையில்லை

(C) Wages may given
சம்பளம் வழங்கலாம்

(D) Released
விடுதலை செய்யலாம்

89. In Out gang female convict prisoners shall be
பெண் தண்டனை சிறைவாசிகளை வெளிக்குழு வேலைக்கு

(A) Employed
அனுப்பலாம்

(B) Not Employed
அனுப்ப கூடாது

(C) Not necessary
அவசியமில்லை

(D) Necessary
அவசியம்

90. The Prison made articles
சிறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை தற்போது

(A) Should not be sold
விற்பனை செய்யக்கூடாது

(B) Sold
விற்பனை செய்யப்படுகிறது

(C) Sale is must
விற்பனை செய்வது அவசியம்

(D) Sale is not necessary
விற்பனை செய்வது அவசியமில்லை

91. In Prison office prisoners may be
சிறைவாசிகளை அலுவலகத்தில்

(A) Employed as clerk
எழுத்தர் வேலையில் அமர்த்தலாம்

(B) Not employed as clerk
எழுத்தர் வேலையில் அமர்த்தக்கூடாது

(C) Both are wrong
இரண்டும் தவறு

(D) Both are correct
இரண்டும் சரி

92. The expansion of S.S.J is
S.S.J என்பதன் விரிவாக்கம்

(A) Special Sub Jailor

(B) Special Security Job

(C) Special Sonic Job

(D) Special Sub Jail

93. The Member of the Reception unit in the Prison is
சிறையில் வரவேற்ப்பு குழுவின் உறுப்பினராக உள்ளவர்

(A) Welfare Officer
நல அலுவலர்

(B) Jailor
சிறை அலுவலர்

(C) Administrative Officer
நிர்வாக அலுவலர்

(D) Deputy Jailor
துணை சிறை அலுவலர்

94. In Prison the frequency of conducting test alarm is
சிறையில் இடர் ஒலி சோதனை எத்தனை மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது

(A) Once in a month
மாதம் ஒருமுறை

(B) Occasionally
எப்போதாவது

(C) Once in 3 months
3 மாதத்திற்கு ஒருமுறை

(D) Once in 2 months
இரண்டு மாதத்திற்கு ஒருமுறை

95. What is the amount of security deposit for the Assistant Jailor?
உதவி சிறை அலுவலருக்கான பிணை வைப்புத்தொகை எவ்வளவு?

(A) 5000

(B) 2500

(C) 1500

(D) 1750

96. Weight of prisoners checked once in
சிறைவாசிகளின் எடை எவ்வளவு கால இடைவெளியில் சரிபார்க்கப்பட வேண்டும்

(A) One month
ஒரு மாதம்

(B) Fortnight
பதினைந்து நாட்கள்

(C) Two month
இரண்டு மாதம்

(D) Three month
மூன்று மாதம்

97. Who is the member - Secretary for "classification committee" under rule 210 of Tamil Nadu Prison rule, 1983?
தமிழ்நாடு சிறை விதிகள், 1983, இன் விதி எண் 210 இன் கீழ் "வகைப்பாட்டு குழுவின்" உறுப்பினர்-செயலாளர் யார்?

(A) Chief Head Warder (Tower)
முதல் தலைமைக் காவலர் (கோபுரம்)

(B) Senior teacher
முதுநிலை ஆசிரியர்

(C) Assistant Jailor (Interview)
உதவி சிறை அலுவலர் (நேர்காணல்)

(D) Deputy Jailor (Stores)
துணைச் சிறை அலுவலர் (கிடங்கு)

98. What is the boundary should be around the prison campus?
சிறையினை சுற்றி வெளி எல்லை எவ்வளவு இருத்தல் வேண்டும்?

(A) At least 200 mtrs
குறைந்தபட்சம் 200 மீட்டர்

(B) At least 180 mtrs
குறைந்தபட்சம் 180 மீட்டர்

(C) At least 100 mtrs
குறைந்தபட்சம் 100 மீட்டர்

(D) At least 300 mtrs
குறைந்தபட்சம் 300 மீட்டர்

99. At the time of transfer the Assistant Jailor (clothing) may be permitted a maximum of ____________ work days for handing over the charges?
இடமாற்றத்தின் போது உதவி சிறை அலுவலர் (ஆடை, கிடங்கு) பொறுப்புகளை ஒப்படைத்திட அதிக பட்சமாக ____________ வேலை நாட்கள் அனுமதிக்கலாம்.

(A) 2

(B) 3

(C) 4

(D) 5

100. Which one of the following is correct?
கீழ்கண்டவற்றுள் எது சரியானது?

(A) Prisoners to be treated with bad temper
சிறைவாசிகளை கெட்ட சுபாவத்துடன் நடத்த வேண்டும்

(B) Prison officers may engage in trade
சிறை அலுவலர்கள் வியாபாரத்தில் ஈடுபடலாம்

(C) Prisoners to be struck
சிறைவாசிகளை அடிக்க வேண்டும்

(D) Superior officers to be treated respectfully all time
உயர் அதிகாரிகளை அனைத்து நேரத்திலும் மரியாதையாக நடத்த வேண்டும்